ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2489/04 - 2026 මැයි මස 18 වැනි සඳුදා - 2026.05.18
*2489/04 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் மினிப்பே பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

மினிப்பே பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மினிப்பே பிரதேச சபையின் இல. 10 மொரயாய வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு. வெவே முதியன்சேலாகே அனுரசிரி பண்டார என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்(262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான மினிப்பே பிரதேச சபையின் இல. 10 மொரயாய வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருமதி. மாலகம்மன உடதென்னே கெதர பூர்ணிமா சத்துரங்கனீ என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

மினிப்பே பிரதே சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஹேவாகே தனுஸ்க நலீன் சம்பத் பிரனாந்து ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திருமதி. மாலகம்மன உடதென்னே கெதர பூர்ணிமா சத்துரங்கனீ என்பவர் மினிப்பே பிரதேச சபையின் இல. 10 மொரயாய வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கலாநிதி எச்.டீ. என். சம்பத் பிரனாந்து,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
மினிப்பே பிரதேச சபை.

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**கண்டி.**
**2026 மே மாதம் 15 ஆம் திகதி.**

EOG - 05 - 0191